**செ.வெ.எண்.29/2017** **நாள்: 20-01-2018**

**காஞ்சிபுரம் தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வீட்டு காய்கறி தோட்ட விதை தளைகள் விற்பனையை வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் டாக்டர்.கே.சத்தியகோபால் இ.ஆ.ப., அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் விவசாயிகளுக்கு வழங்கி துவக்கி வைத்தார்.**

இத்திட்டத்தில் வீட்டு தோட்டத்திற்கு தேவையான காய்கறி விதைகள் அடங்கிய ரூ.20 மதிப்புள்ள காய்கறி விதை பொட்டலங்கள் 40 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகிறது. இத்தளையில் கத்தறி, மிளகாய், முருங்கை, அவரை மற்றும் பாகல் விதைகள் அடங்கி உள்ளது. இது ஒரு நபருக்கு அதிகபட்சமாக 6 பொட்டலங்கள் வரை வழங்கப்படும். வீட்டு தோட்டங்களுக்கு விதைகள் தேவைப்படுவோர் ஆதார் அல்லது குடும்ப அட்டை நகல் மற்றும் இரு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் சமர்ப்பித்து, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 13 வட்டாரங்களில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் அனுகி பெற்றுக் கொள்ளலாம். காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 19 ஆயிரத்து 600 காய்கறிவிதை பொட்டலங்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காய்கறி விதை பொட்டலங்களை வழங்கி பேசிய முதன்மைச் செயலாளர், விவசாயிகள் பூச்சி மருந்து உபயோகிப்பதை குறைத்து கொள்ள வேண்டும். இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும். இதன்மூலம் சத்தான, ஆரோக்கியமான காய்கறிகளை நாம் பெற முடியும். எனவே தோட்டக்கலை அலுவலர்கள் விவசாயிகளிடம் இதனை ஊக்குவிக்க வேண்டும். விவசாயிகளும் பூச்சி மருந்துகள் உபயோகிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் அறிந்து, அவை ஏற்படாமல் இருக்க, இயற்கை விவசாயத்தை பின்பற்றி தரமான காய்கறிகளை உற்பத்தி செய்து பயனடைய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.குணசேகர், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திரு.பொ.இம்மானுவேல் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**செய்தி வெளியிடுபவர்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**